20 காலணு Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு

" சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தாணிக் கெல்லா மெடுத்தோதுவோமே "

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

Acc-No-10813

ஆசிரியர் :
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நே. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. திங்கள் 13-3-33

பீப்பாய் போட்டி



சென்ற வருடத்தில் வங்காள அரசாங்கத்தில் கள்ளு வருமானம் கவிழ்ந்து போச்சுதாம். கள்ளுக் குடியும் குறைந்து போயிற்றும். அதற்குக் காரணம் சட்ட மறுப்பு இயக்கமே என்று சர்க்கார் சொல்கிறது. வங்காள சர்க்கார் பீப்பாய் சவாரி பண்ணுவது இப்போது தடுமாற்ற மடைந்திருக்கிறது. ஆனல் சென்னை மாகாணமோ பீப்பாய் சவாரிப் போட்டியில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. குடியும் அதிகமாய்க் கொணடே யிருக்கிறது. என்னே விபரீதம் !

அரக்கனுக்கு வியாதி!

சட்ட மறுப்பு இயக்கத்திற்கு எந்த இடத்தி லிருந்து 'ஸர்ட்டிபிகேட்' கிடைக்காதோ அந்த இடத்திலிருந்து இப்பொழுது நற்சாக்ஷி கிடைத்திருப்பது தான் விந்தையினும் விந்தை. மது விலக்குக்கு சட்ட மறுப்பு உபயோகமா யிருந்திருக்கிற தென்று வங்காள சர்க்காரின் அறிக்கை கூறுகின்றது.

1931-ம் வருஷத்தை விட 1932-ம் வருஷத்தில் கள்ளு வருமானத்தில் வங்காள கவர்ன் மெண்டுக்கு 23 லக்ஷம் ரூபாய் குறைவு ஏற்பட்டு விட்டதாம். "நாட்டில் எங்கும் பணப் பஞ்சம் ஏற்பட்டிருப்பது இதற்கு ஒரு காரண மாயினும், முக்கியமாக சட்ட மறுப்பு இயக்கத்தின் வேகமே இதற்குக் காரண மென்பது எங்கள் அபிப்பிராயம். இந்த இயக்கத்தால் என்ன பலன் ஏற்பட்டிருக்கிறது தெரியுமா? நோவாகாலியிலும், திப்பராவிலும் உள்ள அத்தனை ஹிந்துக்களும் கள்ளின் மூஞ்சியிலேயே விழிப்பதில்லை எனப் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டிருக்கின்றனர்" என்று துரைத்தனத்தார் தங்கள் அறிக்கையில் சொல்லி யிருக்கிறார்கள்.

சட்ட மறுப்பு இயக்கத்தால் நாட்டில் மது விலக்கு இயக்கம் முன்னேறுகின்றது என்பதற்கு இந்த நற்சாக்ஷிப் பத்திரம் போதாதா?

சில ஜில்லாக்களில், 'கலால்' வஸ்துக்களின் மீது விதிக்கப்பட்டிருந்த நிபந்தனைகளைத் துளி கூட மக்கள் மதிக்கவில்லை யென்பதையும் சர்க்கார் ஒரு காரணமாகச் சொல்லி யிருக்கின்றது. அப்படியானால் திருட்டுக் கள் இறக்குவதும், திருட்டுக் கள் விற்பதும் அதிகமாகி யிருக்கிற தென்று சர்க்கார் சொல்கிறார்கள் போலும்! அப்படியானால் வங்காள போலீஸ் எங்கே தூங்குகிற தென்று கேட்கிறோம். நிரா யுதபாணிகளாக நின்று கள்ளுக் கடை மறியல் செய்யும் சாத்விகத் தொண்டர்களைத் தடியாலடித்துத் தாக்குவதற்குத் தான் போலீஸ் புலிகள் வருகின்றனரே யன்றி, திருட்டுக் கள்ளை நிறுத்துவதற்கு கலால் இலாகாவினு லும், போலீஸ் இலாகாவினாலும் முடிய வில்லை என்பது விளங்குகின்ற தல்லவா? நிற்க,

வங்காளத்தில் கள்ளரக்கனுக்குப் பிடித்துள்ள வியாதி முற்றிப் போய் அவன் சாக வேண்டு மென்பது பலருடைய பிரார்த்தனை.

விவாகமும் சிறையும்

அலெக்ஸாந்தர் டூமா என்ற ஆசிரியன் எழுதிய 'மாண்டி கிறிஸ்டோ பிரபு' என்ற புத்தகத்தில் சோககரமான ஓர் சம்பவம் வருணிக்கப் பட்டிருக்கிறது. கதா நாயகன் ஒரு பெண்ணைக் காதலித்து விவாகம் செய்து கொள்ளும் தருவாயி லிருக்கிறான். ஆனால் அவனைப் போலீசார் கைது செய்து தீவாந்தரத்துக்கு அனுப்பி விடுகின்றனர். அந்த கட்டத்தைப் படிக்கும் போது எந்த ஹிருதயமும் உருகி விடும்.

அதுவாவது ஒரு கதைதான். ஆனால் அது போன்ற உருக்கமான சம்பவங்கள் இந்தியாவில் நம் கண் முன்னமேயே நடை பெறுகின்றன. ஜோகலேகர் என்பவர் மீரத் சதி வழக்கில் ஒரு கைதியாக விசாரிக்கப்பட்டு வந்தார். அவ் வழக்கை ருசிகரமாக கவனித்துக் கொண்டிருந்தவர்களில் 'ஸ்ரீமதி அம்பிகா' என்ற பெண்ணும் ஒருத்தி. அவள் நாகபுரியில் உபாத்தியாயத் தொழிலில் இருக்கிறவள். கூண்டில் கைதி நின்று கொண்டிருந்தபோது கைதியின் கண்ணும், ஸ்ரீமதி அம்பிகையின் கண்ணும் ஒன்றை யொன்று கவ்வின. கண்ணொடு கண்ணினை நோக்கின் பலனென்னவென்று சொல்ல வேண்டுமா?

ஜனவரி 10ம் தேதியன்று கைதிக்கும், அம்பிகைக்கும் கல்யாணம் நடந்தது. 16ம் தேதி யன்று ஜோகலேகர் தண்டிக்கப் பட்டார். தனது காதற் கதையை ஸ்ரீமதி அம்பிகை 'மாஞ்செஸ்டர் கார்டியன்' பத்திரிகையில் எழுதியிருக்கிறாள்.

"ஒரு நாளைக்குக் கூட அவரை விடுதலை செய்ய அதிகாரிகள் இசைய வில்லை. கல்யாணப் பத்திரிகையில் கையெழுத்திட அவருக்கு ஒரு மணி நேரம் கூட சாவகாசம் கொடுத்தார்களில்லை. இப்போது அவருக்கோ பன்னிரண்டு வருடம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது."

அறிவிப்பு

நமது ஆசிரியர் சங்கு ஸுப்ரஹ்மணியம் அவர்களும், எஸ். கணேசன் அவர்களும் மகாத்மாவைத் தரிசிப்பதற்கு எரவாடாவுக்கு யாத்திரை போயிருப்பதால் அடுத்த வியாழக்கிழமை யன்று "சங்கு" வெளி வராது.

குதிரைக்குள் எதிரிகள்

'திரோய்' நகரை கிரேக்கர் முற்றுகை யிட்டிருந்தனர். பிரமாதமான யுத்தம்! என்ன சண்டை போட்டும் 'திரோய்' மதிலைத் தாண்டுவதற்கு கிரேக்கர்களால் முடிய வில்லை. என் செய்வது? வாள் வலியும், தோள் வலியும் பயனில்லாது போனால் சூழ்ச்சியில் இறங்க வேண்டியது தானே.

மதிலுக்கு அப்பால் யுத்த களத்தில் இருந்த கிரேக்கக் கூடாரங்கள் ஒவ்வொன்றாக கலைக்கப் பட்டன. தொலை தூரத்தில் கிரேக்கக் கப்பல்களில் பாய்மரம் விரிக்கப் பட்டது. கிரேக்கர்கள் யுத்த களத்தினின்று நழுவ ஆரம்பித்தனர். "ஹா! ஓடுகிறார்கள்! எதிரிகள் ஓடி விட்டார்கள்! தோல்வியை ஒப்புக் கொண்டு மறைந்து போனார்கள்!" என்ற சந்தோஷக் குரல்கள் 'திரோய்' நகரில் ஒலித்தன.

திரோயர்கள் மதிலைத் தாண்டி யுத்த களத்தில் வந்து பார்த்தனர். கண்ணுக் கெட்டின தூரம் வரையில் கடலிலோ, தரையிலோ ஒரு கிரேக்கனையாவது காணவில்லை. ஆனால் அங்கு பிரும்மாண்டமாக மரத்தால் செய்யப்பட்ட ஓர் குதிரை நிற்க வைக்கப் பட்டிருந்தது. "திரோய் நகர தேவதைக்கு கிரேக்கர்கள் சமர்ப்பிக்கும் காணிக்கை" என்று அந்தக் குதிரையினடியில் எழுதப் பட்டிருந்தது. திரோயர்களுக்கு ஏற்பட்ட சந்தோஷத்துக்கு அளவில்லை. தாங்கள் அடைந்த பெரிய வெற்றியைக் கொண்டாடுவதெப்படி? கிரேக்கர்கள் விட்டு விட்டுப் போயிருந்த குன்றை யொத்த அந்தக் குதிரையை தங்கள் ஊருக்குள் ஊர்வலமாக இழுத்துச் சென்றனர். கடைசியில் குதிரையைக் கோயிலண்டை விட்டு விட்டு அவனவன் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான்.

ஊர் சந்தடி அடங்கிற்று. நள்ளிரவு வந்தது. திடீரென்று "எதிரிகள்! கிரேக்கர்கள்! ஐயோ வெட்டுகிறார்களே! குத்துகிறார்களே" என்ற கூக்குரல் திரோய் நகரில் செவிடு பட்டது. எங்கிருந்து, எவ்வாறு இத்தனை கிரேக்கர்கள் வந்தனர்? மதில்கள் தான் நன்றாய்க் காவல் காக்கப் பட்டு வருகின்றனவே! திரோயர்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. எந்தக் குதிரையை திரோயர் இழுத்துக் கொண்டு வந்தனரோ அந்தக் குதிரையின் வயிற்றில் அநேக கிரேக்கர்கள் குந்திக் கொண்டிருந்தனரன்றோ! இதை அந்த மடையர்கள் முன்னமே உணர்ந்திருக்கலாகாதா? கடைசியில் திரோய் நகரம் சர்வ நாசமாயிற்று. இந்தக் கதையை 'இலியாத்' என்ற காவியமாக ஹோமர் என்னும் மகா கவி எழுதியிருக்கின்றான்.

இப்போது இந்தியாவில் வெள்ளைக் கடுதாசி என்று ஒரு பண்டம் நுழையப் போகின்றதே, அது மேற்படி கதையின் குதிரையைப் போன்றது. இந்தியக் கிளர்ச்சியை அடக்க எந்த வழியும் பலனளிக்க வில்லை. ஸைமன் கமிஷன், லோதியன் கமிட்டி, பெடரல் கமிட்டி, மூன்று வட்ட மேஜைகள் எல்லாம் சுழித்துப் போனது கண்டு இப்போது 'வெள்ளைக் கடுதாசி' என்ற திரோய்க் குதிரையை ஆங்கிலேயர் நுழைத்திருக்கின்றனர். இந்தக் குதிரையின் அந்தரங்கத்தை இந்திய மிதவாதிகள் உணர்ந்தார்களா இல்லையா? அன்று திரோயர் செய்த தவறை இந்தியாவிலும் செய்து இந்த நாட்டினருக்குள்ள கொஞ்சம் நஞ்சம் உரிமைகளையும் போக்கிக் கொள்ளப் போகின்றார்களா?

பூரியின் மேலே, கீழே—

புதிய அரசியலைக் கண்டந் துண்டமாகக் கண்டித்துப் பேசுகையில் மிதவாத கோஷ்டியைச் சேர்ந்த ஸ்ரீமான் சிந்தாமணி ஓர் கதை கூறுகிறார்.

வங்காள மாகாணத்தில் ஒரு பிணியாளி நோயின் உபாதை தாங்க முடியாமல் அவஸ்தைப் பட்டான். வைத்தியர் ஒருவரை அணுகினான். வைத்தியர் அவனுக்கு மருந்து எதுவும் கொடுக்காமல் பல தினங்களுக்குப் பட்டினி போட்டுக் கொண்டிருந்தார். பட்டினி கிடந்து படிப்படியாக மாள்வதை விடச் சிக்கிரத்தில் மரித்து விட விரும்புவதாகப் பிணியாளி சொல்லி, எதையேனும் சாப்பிட அனுமதி தரும்படி கோரினான். கல் நெஞ்சரான அந்த வைத்தியரும் இரக்கங் காட்டுவது போல் பாசாங்கு செய்தார். "நல்லது, நாளைக்கு நீ பூரியைச் சாப்பிடு. ஆனால் மேல் பாகத்தையும், கீழ் பாகத்தையும் ஒதுக்கி விடாவிடில் உனக்குக் குண மேற்படாது." என்று வைத்தியர் கூறினார்.

பூரியின் மேல்பாகமும், கீழ்பாகமும் போய் விட்டால் நடுவில் என்னவிருக்கு மென்பது உங்களுக்குத் தெரியாதா? காற்றைத் தவிர வேறொன்றும் இருக்காதல்லவா? இந்தியாவுக்கு வரப்போகின்ற சீர்திருத்தம் அந்த தோரணையில் தான் இருக்கப் போகின்றது.

எனது கருப்புக் கோழி

(நிப்பு எழுதியது)

கொக்கரக்கோ!

எனது சிட்டுக் குருவிக்கு உடம்பு சரியாயில்லை. அதற்கு வைத்தியம் செய்ய எற்பாடு செய்து கொண்டிருக்கிறேன். ஆனால் குருவியில்லாத சமயத்தில் எனது கருப்புக் கோழிக்கு ஓர் உத்தியோகம் தந்திருக்கிறேன். எதாவது ஒரு விஷயத்தை நாம் சொன்னால் அதற்கு பளிச்சென்று அது அழகான பதில் தருகின்றது. 'ஸபாஷ்' என்று நாம் புகழ்ந்தால் 'கொக்கரக்கோ!' என்று அதை ஏற்றுக் கொள்கிறது. வாழ்க என் கோழி!

கனிமாரா ஹோட்டலில்

சென்னை கனிமாரா ஹோட்டலில் ஒரு விருந்து நடந்தது. அங்கு சென்னை கவர்னர், கனம் ஹோம் மெம்பர் உஸ்மான் சாயபுவையும், அவரது போலீஸ் இலாகாவையும், வானமளாவப் புகழ்ந்து பேசினர். இதை நான் கோழியிடம் வருணித்த போது அது கூறிற்று:

"பாவம்! உஸ்மான் சாகிபுக்கு நாம் இரங்க வேண்டும். ஏனெனில் அவர் இலாகாக்காரர்கள் இன்னும் லக்ஷ்மிகாந்தனைப் பிடிக்க வில்லையாம். தடியடி தர்பாருக்கு அடுத்தாற் போல் பிரம்படி ராஜ்யத்தி லிறங்கினீரே யென்று தாறுமாறாகப் பலர் உஸ்மானைக் கேள்வி கேட்கிறார்களாம். ஆகவே அவரை கவர்னர் பெருமான் வந்து புகழ்ந்து தூக்கி விடப்பட வேண்டிய ஓர் நிலைமைக்கு அவர் வந்திருக்கிறார். ஆனால் எவ்வளவு தூக்கினாலும் எழும்பாதவர்களும் உண்டல்லவா?"

ஒரு போட்டிப் பந்தயம்!

"கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டிக்கு 15 பேரைப் பொறுக்கி யாகி விட்டதாகத் தெரிகிறது" என்று டெல்லியினின்று ஒரு செய்தி கிடைத்துளது. ஆனால் யார் யாருக்கு இந்த அதிர்ஷ்டம் கிடைத்திருக்கிற தென்பது பகிரங்கமாக இல்லை. தமக்கு உண்டா இல்லையா யென்று அநேக சட்ட சபைப் புலிகள் ஏங்கிக் கொண்டிருக்கின்றனவாம். இது தான் சமயமென்று ஒரு தென்னிந்திய பத்திரிகை ஒரு போட்டிப் பந்தயம் நடத்தப் போகின்றதாம். இன்னின்னாருக்கு இடம் கிடைக்கும் என்று வாசகர்கள் சில பெயர்களை எழுதி அதனோடு பணமோ, ஸ்டாம்போ அனுப்ப வேண்டுமாம். கிண்டியில் ஓடும் குதிரைக்கும், டெல்லியில் ஓடும் மனிதனுக்கும் இப்போது வித்தியாசமில்லாது போய் விட்டது. நமது வாசகர்களே, நீங்கள் மண்டையை உடைத்துக் கொள்ள வேண்டாம்! ஏனெனில், "இந்தப் போட்டிப் பந்தயத்துக்கு 'பிரைஸ்' ஒன்றும் கிடைக்கப் போவதில்லை. எந்தப் பிராணி சிமைக்குப் போனால் நமக்கென்ன?" என்று கோழி எச்சரிக்கை செய்கின்றது.

தலை சிழ்ப் பாடம்

"வைஸ்ராயே திரும்பிப் போ" என்று கூச்சலிட்ட சிலருக்கு சிறைத் தண்டனையும், சிலருக்கு அபராதமும் விதிக்கப்பட்டதாக வடக்கே யிருந்து செய்தி கிடைத்தது. அதைக் கோழி யிடம் சொன்ன போது அது கூறிற்று: "அப்படியானால் வைஸ்ராயே வருக! வருக!" என்று கூறுபவர்களுக்கு வைஸ்ராய் நூறு ரூ. விதம் இனாம் தருகின்றாரா என்ன? போவென்று சொல்பவனிடம் 100 ரூ. வசூலித்தால் வா வென்று சொல்பவனுக்கு 100 ரூபா கொடுக்க வேண்டாமோ?"

மந்திரிகள் ஏலம்!

"கள்ளுக் கடைகளை ஏல மிடுவது குறித்து சர்க்காரை அநேகர் கண்டிக்கின்றனர். ஆனால் தற்காலத்தில் 'ஏல வழி'தான் சிறந்தது" என்று ஐக்கிய மாகாணக் கள் மந்திரி பேசி யிருக்கிறார் என்ற செய்தியைச் சொன்னேன். "இந்தக் காலத்தில் 'ஏல வழி' தான் சிறந்த தென்றால் மந்திரி உத்தியோகங்களைக் கூட சர்க்கார் ஏலம் போடலாமே! முப்பது ரூபாய் சம்பளத்துக்குக் கூட மந்திரிகள் கிடைக்கலாமென்று எனக்குத் தோன்றுகிறது" என்று கோழி சொல்லிற்று.

'காங்கிரஸ் டான்ஸுகள்'!

சென்னையில் சில நாட்களுக்கு முன்னே "காங்கிரஸ் டான்ஸுகள்" என்ற பெயருடைய ஒரு சினிமாப் படம் பலமாக விளம்பரம் செய்யப்பட்டது. "சென்னைப் போலீஸ் இலாகாவில் சிலர் ஷெ பெயரைக் கேட்டு முதலில் திடுக்கிட்டுப் போகவில்லையா? பதினன்கு காந்தி, காங்கிரஸ் படங்களை சர்க்கார் தடுத்து விட்டு இப்போது 'காங்கிரஸ் டான்ஸுகள்' என்ற படத்தை மட்டும் அனுமதிப்பானேன் என்று திகைக்க வில்லையா?" என்று கோழி கேட்கின்றது.

படிப்புக்கு மார்வாடி மூளை

(ஆச்சார்யாரே)

சர்வ கலாசாலைகள்! இந்தப் பெயரை எடுத்து விட்டு அவற்றைத் "தபாலாபீசுகள்" என அழைப்பதே பொருத்தமானது. கடிதங்களுக்கு முத்திரைகள் போடுவது மாதிரி, இவை மாணவர்களை ஒவ்வொருவராகப் பிடித்து, "பி. ஏ.", "எம். ஏ" என்று முத்திரைகள் போட்டு விடுகின்றன.

ஆக்ஸ்போர்டும், கேம்பிரிட்ஜும் நமது காலேஜுகளிடம் ஒரு விஷயத்தில் முற்றிலும் தோல்வி யடைந்து விட்டன. கல்கத்தா சர்வ கலாசாலையில் படிக்கும் மாணவர்களின் கையில் எத்தனை புத்தகங்கள்! அவைகள் என்ன வாசிப்பதற்காகத்தானா அல்லது அடுக்கி அடுக்கி அழகு பார்க்கத்தானா? பிள்ளைகள் சிரமப்பட்டு, அர்த்தத்தைத் தெரிந்து கொண்டு படிக்கிறதென்ற காலம் போய் விட்டது. எடுத்ததற்கெல்லாம் உரைகள்; ("Notes") கேள்விகளாவும் பதில்களாகவும் வரையப் பட்டுக் கிடக்கின்றன; பிள்ளைகள் புத்தகங்களைக் கையால் கூடத் தொடுவதில்லை; இந்த உரைகளை விளக்கெண்ணெய் போல் விழுங்குவது தான் அவர்கள் தொழிலாகி விட்டது.

அறிவு வளர்ச்சி என்பதையே சர்வ கலாசாலைகளில் காணோம். தங்கள் பெயர்களுக்குப் பின்னால் அத்தனை ஆங்கில எழுத்துக்களையும் வரிசையாகச் சேர்த்துக் கொள்ளவே மாணவர்கள் பிரியப் படுகிறார்களே யொழிய, வித்தையில் மூளையைச் செலுத்துவதே கிடையாது. முன் காலத்தில் சர்வ கலாசாலைகள் ஞான பீடங்களாக விளங்கின; இக்காலத்திலோ? சொன்னால் வெட்கக் கேடு.

மாணவர்கள் தாமாகவே படித்து முன்னுக்கு வருவது தான் நேர்மையானது. பர்னார்ட் ஷா எந்தச் சர்வ கலாசாலையில் முத்திரை போட்டுக் கொண்டார் என்று கேட்கிறேன். வருஷத்தில் ஆறு மாதம் லீவு! என்ன சர்வ கலாசாலைகள்! என்ன படிப்பு! எல்லாம் வியர்த்தம்! காலத்தை வீணாக்கும் சமாச்சாரம். ஒழிந்த வேளைகளில் பிள்ளைகள் தங்கள் பாடங்களைத் தவிர, இதர விஷயங்களைப் பற்றிப் படித்துத் தெரிந்து கொள்ளக் கூடாதா? மார்வாடிகள் பணம் சேர்ப்பதில் எப்படி மூளையை செலுத்துகிறார்களோ, அந்த மாதிரி மாணவர்கள் படிப்பதில் மூளையை உபயோகிக்க வேண்டும். —விசாகப்பட்டணப் பிரஸங்கம்.

ரங்கய்யர் மசோதா

டில்லி சட்ட சபையில் உத்தியோகப் பற்றற்ற மசோதாக்களின் விவாதத்திற்காக இம் மாதம் 24-ந்தேதி ஒதுக்கி வைக்கப் பட்டிருக்கின்றது. ஆகவே அன்று என்னென்ன மசோதாக்களை எந்தெந்தக் கிரம வரிசையில் ஆலோசிப்பதென்பதைப் பற்றி சீட்டுக் குலுக்கி போட்டதில் ரங்கய்யர் மசோதாவுக்கு முதல் சீட்டு விழுந்திருப்பது ஒரு நற்சகுனமே! ஆகவே இதைப் பற்றிய விவாதம் 24உ நடை பெறும்.

ஏஜெண்டுகளுக்கும் வாசகர்களுக்கும்

மகாத்மா காந்தியடிகளால். பெரும்பாலும் எழுதப்பட்டு பூனாவினின்று 'ஹரிஜனம்' என்று பத்திரிகை வெளி வருகின்றது. அதன் தமிழ் மொழி பெயர்ப்பை வெளி யிடும் பாக்கியத்தை மகாத்மாவின் ஆசி பெற்று சங்கு காரியாலயம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. தமிழில் 'ஹரிஜனம்' பத்திரிகை வெளி யிடுவதற்கு முன் சங்கு ஏஜென்ஸிகளை ஒழுங்கு செய்து கொள்ள விரும்புகின்றோம்.

ஆகவே ஏஜெண்டுகள் கணக்குகளை உடனே நேர் செய்து கொள்ள வேண்டும். மேலும் இது வரை முன் பணம் அனுப்பாதிருப்பவர்கள் உடனே அனுப்பி உதவ வேண்டு மென்பதையும் நினைப்பூட்டுகிறோம்.

வாசகர்கட்கு ஒரு வார்த்தை. சில ஊர்களில் திடீரென நமது பத்திரிகை நின்று விடுவது பற்றி மனஸ்தாபப் படுகிறீர்கள். எந்தெந்த ஊரில் ஏஜென்ஸிக்காரர் சரியா யில்லையோ அந்த தான் பத்திரிகைகள் நிறுத்தப் படுகின்றன. ஏஜெண்டுகளுக்கு ஆங்காங்குள்ள அன்பர்கள் உதவி செய்து பணம் காரியாலயத்தை அடையுமாறு செய்ய வேண்டும். வாசகர்கள், ஏஜெண்டுகள், காரியாலயத்தார் நாம் அனைவரும் ஒரு பெரிய குடும்பமென்ற உணர்ச்சி நமக்குள் ஏற்பட வேண்டும்.

காரியாலயத்தின் சார்பாக
சங்கு ஸுப்ரஹ்மணியன்
ஆசிரியர்.

ஹரிஜனங்களுக்கு

பாபநாசம் தாலுக்கா ஆரியங்காவல் சேரியிலுள்ள கேணியை ரிபேர் செய்வதற்கு ரூ 20ம், பொரசக்குடியில் புதிதாக கேணி வெட்ட ரூ. 100ம் வேண்டியதற்கு அமிருதலிங்கய்யர் என்பவர் பாதி தொகை தாம் கொடுப்பதாகக் கூறியதால் பாக்கி பாதிக்கு தாலுக்கா போர்டைச் சேர்ந்த [illegible] அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இதை அறிந்த ஹரிஜனங்கள் கட்குடியை நிறுத்தி விட்டனராம்.

நிற வேற்றுமை

இந்த அரசாங்க முறையின் கீழ் நடந்து வரும் நிற வேற்றுமை அநியாயம் கொஞ்சம் நஞ்ச மன்று. வெள்ளையருக்கென்று ஒரு வகை சவுகரியமும், கறுப்பர்களுக்கென்று இன்னொரு வகை ஏற்பாடும் இருந்து வருவதைக் காண்கின்றோம். ரயில்வேக்களில் பிரயாணம் செய்யும் போது நாம் பார்த்திருக்கிறோம். சாப்பாட்டு விடுதி, தங்கும் விடுதி, மல ஜல விஸர்ஜனத்திற்கான இடம் இவைகளில் வெள்ளையர்களுக் கென்று பிரத்தியேகமான இடங்கள் வைக்கப்பட்டுள.

வெள்ளைக்காரன் திருடி விட்டோ, கொலை செய்து விட்டோ தண்டிக்கப்பட்டானானால் ஜெயிலில் கூட அவனுக்கு 'ஸ்பெஷல்' சவுகரியங்கள் செய்து தரப்படுகின்றன. ஏ. வகுப்பு, பி. வகுப்பு கைதிகளுக்கில்லாத சவுகர்யங்கள் கூட வெள்ளைக்காரனுச்குக் கொடுக்கப்படுகிறது. கொலைக் குற்றஞ் செய்த ஆங்கிலேயனுக்கு தூக்கு தண்டனை விதிக்க சாதாரண இந்திய நீதிபதிக்கு சட்ட ரீதியாக அதிகாரம் கிடையாது. அந்தச் சட்டத்தைத் திருத்தியமைக்க இந்திய சட்ட சபைக்கும் அதிகாரம் கிடையாது. பள்ளிக்கூடங்களிலும், ஐரோப்பியப் பள்ளிக்கூட மென்று தனிப் பள்ளிக் கூடங்கள் உண்டு. இந்திய வரிப் பணத்தினின்று தான் அவைகட்கு பெருந் தொகையான கிராண்டுகள் கொடுக்கப் படுகின்றன.

ஆஸ்பத்திரிகளில் ஐரோப்பியர்களுக் கென்று தனி வார்டு அமைக்கப்பட்டிருக்கிறது. தேவேந்திர போகமாக அங்கு தீனி கொடுக்கப்படுகிறது. ஆனால் அதே சமயத்தில், அதே ஆஸ்பத்திரியில் இந்திய நோயாளி எங்கேயோ ஓர் மூலையில் கிடத்தப்படுகின்றான். அது மட்டு மன்று. பம்பாயில் பெருஞ் செலவு செய்து ஐரோப்பியர்களுக் கென்று தனி ஆஸ்பத்திரியும் நடத்தி வருகிறார்கள். அதற்கு ஏராளமான செலவு செய்யப்படுகிறது. அந்த ஆஸ்பத்திரியில் இந்திய நோயாளிக்கு படுக்கை தர மறுக்கிறார்கள். ஆனால் இந்திய வரிப் பணத்திலேயே அந்த ஆஸ்பத்திரி நடந்து வருகிறது. இந்த நிற வித்தியாச அநியாயத்தைப் பற்றிப் பம்பாய் சட்ட சபையில் ஒரு நாள் விவாதம் நடந்தது. சர்க்கார் ஆங்காங்கு வித்தியாசம் காட்டுவதை இனியேனும் நிறுத்துமா?

கள்ளு சாராய லடாய்

பம்பாய் கோர்ட்டில் ஒரு ருசிகரமான வழக்கு நடந்தது. முலாபக்ஷ் என்ற முஸ்லீம் ரயில்வே ஸ்டேஷனில் வந்திறங்கிய போது அவனைக் கலால் அதிகாரிகள் சோதித்தார்கள். ஒரு புட்டி 'கள்' அவனிடமிருந்தது. அவனைக் கைது செய்து அதிகாரிகள் வழக்குத் தொடுத்தனர். வழக்கில் மாஜிஸ்திரேட்டுக்கும் சர்க்கார் தரப்பு வக்கீலுக்கும் அடியிற் கண்ட சம்பாஷணை நடந்தது.

மாஜிஸ்திரேட்:—அந்நிய நாட்டினின்று வருகின்ற ஒரு புட்டி விஸ்கியை பிரயாணஞ் செய்பவன் வைத்துக் கொள்ளலா மென்று சொல்கிறீர்களே! ஆனால் ஒரு புட்டி கள் மட்டும் வைத்துக் கொள்ளக் கூடாது என்கிறீர்களே அது ஏன்?

வக்கீல்:—ஏனெனில் எவனுக்காவது சாதாரணக் கள் வேண்டுமானால் அதை பம்பாயிலே அவன் வாங்கிக் கொள்ளலா மல்லவா?

மாஜி:—ஆனால் ரயில் பிரயாணத்தின் போது தாக சாந்தி செய்து கொள்வதற்காக வன்றோ கள் புட்டி வைத்துக் கொண்டிருந்தான். பிரயாணத்தின் போது என் செய்வது?

வக்:—அவனுக்கு வேணுமானால் அந்நியச் சாராயத்தைப் புட்டியில் கொண்டு வந்திருக்கலாமே! அதற்கு ஏதும் ஆக்ஷேபனை கிடையாதே!

மாஜி:—'சுதேசி' எண்ணம் அவனுக்கு அதிகம் போலும்! ஆகவே தான் கள்ளைக் கொணர்ந்தான் போலும்! ஆயினும் அவனுக்கு ஒரு ரூபாய் அபராதம் விதிக்கிறேன்.

இந்த வழக்கை 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகையில் படித்தோம். ரயிலில் ஒரு புட்டி அந்நியச் சாராயம் கொண்டு போகலாமாம், ஆனால் நாட்டுக் கள் கொண்டு போகக் கூடாதாம். அந்நியச் சாராய விற்பனைக்கு என்ன சூழ்ச்சி பார்த்தீர்களா? உள் நாட்டுக் கள், அந்நிய நாட்டுச் சாராயம் இந்த இரண்டையும் நாட்டினின்று ஒழிக்கவே நாம் விரும்புகின்றோம்.

பிரான்ஸு ஹர்த்தால்

ராணுவத் திமிரில் மூழ்கிக் கிடக்கும் ஐரோப்பிய தேசங்களில் சில இப்பொழுது காந்திஜியின் ஸாத்வீக முறைகளைக் கையாளத் தொடங்கி யிருப்பது குறிப்பிடத் தக்கது. உதாரணமாக பிரான்ஸ் தேசம் பூராவும் அன்றொரு நாள் முதல் தடவையாக ஒரு "ஹர்த்தாலை" நடத்தியதாம். சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு அதிகப்படியாக வரி விதித்து, அவர்களது சம்பளங்களைக் குறைக்கப் போவதாக பிரெஞ்சுக்காரர் தீர்மானித்ததே இதற்குக் காரணமாம்.

உடனே உத்யோகஸ்தர்கள் அனைவரும் வேலைக்குப் போக வில்லை. டெலிபோனில் வேலை செய்யும் பெண்கள் லயன்களை அறுத்து விட்டார்களாம். யாராவது டெலிபோன் நெம்பர்கள் கேட்டால் தப்பு நெம்பர்களைச் சொல்லி காரியம் ஆகவொட்டாமல் தடுத்தனராம். தபால்காரர்கள் ஒரு மணி நேரத்திற்குக் கடிதங்களை டெலிவரி செய்யவே யில்லை. பஸ்ஸுகள் எல்லாம் நின்று விட்டன. பிரயாணிகள் என்னகத்தியும், டிரைவர்களும், கண்டக்டர்களும் அசையவே யில்லை. தபாலாபீஸ்களில் ஒவ்வொரு உத்தியோகஸ்தரும் முறை போட்டுக் கொண்டு ஒரு மணி நேரத்திற்கு லீவு அனுபவித்தார்களாம்.

பொது ஜனங்களுக்கு விரோதமாக சர்க்கார் ஏதேனும் காரியங்கள் செய்தால், தங்கள் மனதில் ஏற்பட்ட குறையைப் பொது ஜனங்கள் எவ்வாறு தெரிவிப்பது? அதைத் தெரிவிக்கும் ஆயுதங்களே ஹர்த்தால், கடையடைப்பு முதலியவை. பிரான்ஸ் தேசத்தில் இந்த ஹர்த்தால்களைத் தடுக்க அவசரச் சட்டம் போடுவார்களோ என்னவோ? அவசரச் சட்டம் வரைய அங்கு ஆளில்லா விட்டால் இந்தியாவில் இப்போது வைஸ்ராயாயுள்ள வில்லிங்டன் பிரபு அங்கு போனாரானால் வெகு நன்றாக அவசரச் சட்டங்கள் வரைந்து உதவுவார். பிரான்ஸு அரசாங்கத்துக்கு வில்லிங்டன் தேவையா?

காரமான பேச்சுகள்

பல சட்ட சபைகளில் இந்தியப் பிரதிநிதிகள் எனப் பெயர் வைத்துக் கொண்டு முதுகெலும்பில்லாத பல அண்ணாத்தைகள் குந்தியிருக்கிறார்கள். தங்கள் தலைக்கு மேல் ஓடும் விசிறியின் புயற் காற்று வாங்குவதற்காகவே தங்களை வாக்காளர்கள் அனுப்பியதாகவே அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். வரவு செலவு திட்ட விவாதத்தின் போது அவர்கள் இந்திய ஏழைகளின் துர்ப்பாக்கிய நிலைமையை எடுத்துரைத்தார்களா? இல்லவே யில்லை.

ஆனால் சென்னைச் சட்ட சபையில் மிஸ்டர் லாங்லியும், வங்கத்தில் மிஸ்டர் தாம்ஸனும், டில்லியில் ஸர் லெஸ்லி ஹட்ஸனும் ஐரோப்பிய அங்கத்தினர்களே யாவர். அவர்கள் ஏழை இந்தியாவின் கக்ஷியை ஆதரித்து, அறைந்தறைந்து சட்ட சபைகளில் பேசினார்கள்: "இச் சமயத்தில் சம்பளங்களை உயர்த்தவே கூடாது. நிலவரியைத் தான் குறைக்க வேண்டும்" என்றார் லாங்லி. "இரண்டு மந்திரிகளுக்கு மேல் அரசாட்சிக்கு ஆள் வேண்டாம். மந்திரிகள் சம்பளம் மிஞ்சினால் குடிகளுக்கு நல மேற்படும்" என்று தாம்ஸன் வாதாடினார். இன்னும் லெஸ்லியின் பேச்சு முக்கியமாகக் கவனிக்கத் தக்கது.

"இந்திய விவசாயியின் உயிர் வாழ்க்கையே பெரிய போராட்டமாக விருக்கிறது. சில ஜில்லாக்களில் விவசாயியானவன் அதோகதியை அடையாமல் தலை தூக்கி நிற்பதற்காகத் தன் ஆடு மாடுகளையும், ஆபரணங்களையும் விற்க வேண்டியவனாக விருக்கிறான். ஜனங்கள் வறுமை தாங்க முடியாமல் தங்களிடமுள்ள தங்கத்தை யெல்லாம் விற்று விடுகிறார்கள். இப்படிப்பட்ட தங்கமே இந்தியாவை விட்டு வெளியேறுகின்றது. தற்போது தங்கம் ஒரு வியாபாரப் பொருளாகி விட்டது. ஷுஸ்டர், தங்கத்துக்கு ஏற்றுமதி வரி விதிக்க ஏன் தயங்குகிறார்? வரவு செலவு மெம்பர் இந்தியப் பிரஜைகளிடம் சற்றும் அனுதாபம் காட்டவே யில்லை. ராணுவச் செலவை ஏன் இன்னும் குறைக்கக் கூடாது என்று அவரைக் கேட்கிறேன்."

இந்தியாவின் உண்மை நிலையை ஐரோப்பியர்கள் கொஞ்சம் கொஞ்சமாக உணர்ந்து வருவது கண்டு சந்தோஷிக்கிறோம். தங்கள் மரபைச் சேர்ந்தவர்கள் வெளி யிட்டுள்ள மேற்படி கருத்துக்களைக் கூட வில்லிங்டனால் புறக்கணித்து விட முடியுமா?

பொறுக்கிய புஷ்பங்கள்

கள்ளிக்கோட்டைக் கருகில் கல்லாய் என்னு மிடத்தில் "கேரள காங்கிரஸ் தலைமைத் தபா லாபீ'ஸை ஏ. கே. வாரியர் திறந்து வைத்து, போஸ்டு மாஸ்டரும், சிப்பந்திகளும் நியமிக்கப் பட்டனர். 'காங்கிரஸ் தபால்காரர்'கள் வெளி யூர்களிலிருந்து வந்த தபால்களை பட்டுவாடா செய்தனராம். போஸ்டு மாஸ்டரும், சிப்பந்தி களும் இரவில் கைது செய்யப் பட்டனராம்.

கோமில்லா அபாய் ஆசிரமத்துக்குச் சொந்த மான நிலங்கள், ஜங்கம சொத்துக்கள் எல்லா வற்றையும் போலீசார் கைப்பற்றி அதில் வசிப்பவர்களையும் உடனே அஷ் ஸ்தலத்தைக் காலி செய்து விட வேண்டுமென்று உத்திர விடப்பட்டது.

பம்பாயில் சென்ற வாரம் கைது செய்யப் பட்ட 14 பேர்களையும் விடுவித்து விட்டனராம். ஆனால் நகரத்தை விட்டு பிரஷ்டம் செய்து விடப் போவதாகவும், கமிஷனரின் உத்திரவை எதிர் பார்ப்பதாகவும் தெரிகிறது.

வெகு நாட்களாகத் தேடிக் கொண்டிருந்த பாரிஸ்டர் அமீன் வெள்ளி யன்று கைதியானார். அவர் வீட்டைச் சோதனை யிட்டதில் மாகாண காங்கிரஸ் கமிட்டி மெம்பர்களின் ஜாப்தா ஒன்று கிடைத்ததாம்.

"நான் அவனை அழித்து விடுகிறேன்" என்ற தலைப்பையுடைய ஒரு குஜராத்திப் புத்த கம் ஆக்ஷேபகரமானதாக இருந்ததாகக் கருதி சர்க்கார் அதைப் பறிமுதல் செய்து விட்டனர்.

பம்பாயில் ஊர்வலங்கள் நடத்தக் கூடா தென்றும், 5 பேருக்கு மேல் அதிகமாக ஒரு இடத்தில் கூடக் கூடா தென்றும் 144 உத்திரவை இன்னும் 2 மாதத்துக்கு நீடித் திருக்க உத்திரவு செய்யப் பட்டிருக்கிறது.

அலகாபாத்தில் காந்தி தினத்தன்று கைதி யானவர்களில் 7 பேருக்கு தலா 6 மாதம் கடுங் காவல் தண்டனை.

குண்டூரில் 'ஆந்திர ஸ்திரீ சர்வாதிகாரிகள் மகா நாட்டில் நடந்த ஊர்வலத்தின் காரணமாக 10 ஸ்திரீகள் கைது செய்யப் பட்டனர்.

அமிர்தஸரஸில் அனுமதிக்கப் படாத துண் டுப் பிரசுரத்தை வெளியிட்டதற்காக பாபா சிங்குக்கு 6 மாதமும், 500 ரூ. அபராதமும். மற்ற மூவருக்கு தலா 6 மாதமும் 200 ரூ. அபராதமும்.

கல்கத்தாவில் காலம்பூர் என்னும் கிராமத் தில் சர்க்கார் உத்திரவுக்கு மீறி ஒரு மகாநாடு கூட்டியதற்காக 14 காங்கிரஸ் தொண்டர் கைது செய்யப்பட்டனர்.

எந்த வீட்டிற்காவது 14 முதல் 35 வயதுக் குட்பட்ட ஆண் மக்கள் எவரேனும் வந்து ஒரு வீட்டில் 24 மணி நேரத்துக்கு மேல் தங்கினால் அந்த வீட்டுக்காரர் உடனே போலீசாரிடம் தகவல் தெரிவிக்க வேண்டும். தவறினால் 6 மாதம் சிறையும், அபராதமும் விதிக்கப்படு மென்று டாக்காவில் ஒரு நூதன உத்திரவு வெளியிட்டிருக்கிறார்களாம்.

லாகூரில் ராஜப் பிரதிநிதி தம்பதிகள் வர விருந்த சமயத்தில் காங்கிரஸ் தொண்டர்கள் கறுப்புக் கொடியுடன் சென்று "ராஜப் பிரதி நிதியே திரும்பிப் போ" என்று கூறினதற் காக இரண்டு தொண்டர்கள் கைது செய்யப் பட்டனர். லாகூரில் "அகாலி பத்திரிகை" ராஜத் துவேஷமான விஷயங்களைப் பிரசுரித்த தாக அந்த ஆபீஸைச் சோதனையிட்டுப் பல பத்திரிகைகளையும் கைப்பற்றி பிரசுரிப்பதற் கும், அச்சிடுவதற்கும் தனித்தனியாக 500 ரூ. ஜாமீன் கேட்டிருக்கின்றனர்.

கோயமுத்தூருக்கருகில் புலியகுளம் என் னும் கிராமத்தில் ஹரி ஜனங்களுக்காக ஒரு இலவச பாடசாலை ஏற்படுத்தப் பட்டிருக் கிறது.

மாஜி கெய்சர், பொருளாதார நிலைமை அபி விருத்தி யடைந்தவுடன் ஜெர்மனிக்கு மீண்டும் திரும்பி வர அநுமதி வேண்டுமென்று கேட்க உத்தேசித்திருக்கிறாராம்.

ஜெர்மனியில் கொஞ்ச நாளைக்கு முன் கைதி யான இந்தியர்களில் 'ஸ்ரீமான் நாயுடு விடுவிக் கப்பட்டனர்' என்று காமன்ஸ் சபையில் பதிலளிக்கப்பட்டதாம். ஸ்ரீமான் நம்பியாரின் செய்தி என்ன?

அமெரிக்காவில் ஏற்பட்ட பூகம்பத்தினால் 500 பேர் மாண்டனரென்றும், ஒரு ஜில்லா முழுவதும் தீப்பற்றி எரிகிறதென்றும், 62 ஆயிரம் கட்டிடம் நாசமாயிற் றென்றும் செய்தி எட்டுகிறது.

Edited and Published by S. Subramaniam
and Printed by M. R. Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.